# இந்திய ஆட்சிமொழிச் சட்டங்கள்

*முனைவர் கு. அண்ணாதுரை

இந்திய ஆட்சிமொழி வரலாறு மிகவும் விசித்திரமான ஒன்றாகும். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்திய நாட்டில் நடைபெற்று வந்துள்ள அரசுகளின் ஆட்சிமொழி வரலாற்றைப் பார்த்தோமானால் அஃது நன்கு புலப்படும். அசோகர் ஆட்சிக் காலத்தில் பிராகிருதம் என்ற மாகதி மொழி, ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது. கிரேக்கம் மற்றும் அர்மானிக் மொழிகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. சமஸ்கிருதம் பண்பாட்டு மொழியாகவும் பிராகிருதம் அலுவல் மொழியாகவும் இருந்துள்ளன.

மௌரியர் ஆட்சிக்காலத்தில் மாகதி அலுவல் மொழியாகவும் தொடர்ந்தது. சாத்துவாகனர் காலத்தில் பிராகிருதம் ஆட்சி மொழியாக இருந்தது. குப்தர்கள் காலத்தில் சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக இருந்தது. முற்காலச் சோழர்கள் காலத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருந்தது. சாளுக்கிய மன்னர்கள் காலத்தில் சமஸ்கிருதமும் கன்னடமும் ஆட்சிமொழிகளாக இருந்தன. கடம்பர்கள் காலத்தில் பிராகிருதம் அலுவல் மொழியாக இருந்திருக்கிறது. பல்லவர் காலத்தில் சமஸ்கிருதம் வேத மொழியாகவும் பன்னாட்டு மொழியாகவும் உயர்த்தப்பட்டது. முகலாயப் பேரரசில் பாரசீக மொழி அலுவல் மொழியாகவும் சமஸ்கிருதம் கல்வி மொழியாகவும் இருந்துள்ளன. விஜய நகரப் பேரரசுக் காலத்தில் (14-ஆம் நூற்றாண்டு) தேவநாகரி எழுத்துக்களில் கல்வெட்டுகள் உருவாக்கப்பட்டன. மேலும் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சிமொழிகளாகவும் ஆக்கப்பட்டன. ஐதர்அலி, திப்புசுல்தான் ஆட்சிகளில் பாரசீகமும் கன்னடமும் நீதித் துறை மொழிகளாயின.

இவ்வாறாக வட இந்தியாவிலும் சில தென் மகாணங்களிலும் 1837 வரையில் பாரசீகம் ஆட்சி மொழியாக இருந்து வந்துள்ளது. 1835இல் ஆங்கிலேயரது ஆட்சியில் மெக்காலேயின் குறிப்பாணை யினால் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டது. இருப்பினும் வடமொழியின் ஆதிக்கம் 1900 வரையில் இருந்துள்ளது. 1857க்குப் பிறகு இந்திய அரசை இயக்கும் பொறுப்பைப் பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இத்தருணத்தில் காந்தியடிகளின் சிந்தனைகளும் வெளிப்பட்டன. ஆங்கிலம் செய்வதை ஹிந்தி மொழி செய்ய வேண்டும் என்று அவர் கருதினார். மேலும் 1857க்குப் பிறகு சட்டப் பிரிவு, அதிகாரப் பிரிவு, நீதிப் பிரிவு என்ற மூன்று அடுக்குகள் கொண்ட நவீன அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

1919ஆம் ஆண்டில் இந்திய அரசியல் 52-ஏ சட்டப் பிரிவின்படி நாட்டின் வைசராய்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மான்டேகு ஜெம்ஸ்போர்டு குழுவின் அறிக்கையின்படி 1921இல் மொழிவாரி மாகாணங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தியாவில் இரட்டை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு 1919. அதன்படி மாகாணங்களில் பொறுப்புள்ள அரசுகளை ஏற்படுத்துவதே அதன் நோக்கமாகும். அம்மாநில அரசுகளில் இந்தியர்கள் அமைச்சர்கள் ஆகும் நிலையும் உருவாக்கப்பட்டது. சென்னை மாநிலமும் அப்போதுதான் (1921) விரிந்தது. 1921இல் தொடங்கி ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதிய சட்டமன்றங்கள் பொறுப்பேற்றுக் கொண்டன. தாய்மொழிப் படிப்பில்லாத மக்களின் மீது ஆங்கில மொழியைக் கொண்டு ஆங்கிலேயர்களும் ஆங்கிலம் படித்த இந்தியர்களும் ஆட்சி செய்ததும் சட்டங்களை இயற்றியதும் பெரிய சாதனையாக்கப்பட்டன.

1928இல் திரு. எஸ்.சத்தியமூர்த்தி சென்னை சட்டமன்றத்தில் பாரதியின் கவிதைகள் பறிமுதல் செய்யப்பட்டதற்காக ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து ஆற்றிய உரை தமிழர்களை ஒன்று திரட்டியது. சர்.சி.பி.இராமசாமி ஐயர், டாக்டர் பி.சுப்புராயன், பனகல்ராஜா, அரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியாரும், பி.டி.ராஜன், ஏ.டி.பன்னீர்செல்வம் ஆகியோரும் அப்போது அமைச்சர்களாக இருந்தனர். 1935ஆம் ஆண்டின் இந்திய அரசியல்

சட்டத்தின்படி ஆங்கிலம்தான் சட்டமன்றங்களில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற தடையை ஏற்படுத்தவில்லை. ஆதலால் 1937ஆம் ஆண்டு சென்னை மாகாணத் தலைமை அமைச்சராக இருந்த சி.இராஜகோபாலாச்சாரி பள்ளிகளில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்னும் முயற்சியை மேற்கொண்டார். ஆனால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டது.

மேலும் 1952ஆம் ஆண்டில் ஹிந்தியைக் கட்டாயமாகத் தமிழகத்தில் கொண்டுவந்தார் இராஜாஜி. ஹிந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தார் பெரியார். அண்ணா போன்றவர்கள் ஹிந்தி அழிப்புப் போராட்டத்தை நடத்தியதற்காகச் சிறையில் அடைக்கப் பட்டனர். தாளமுத்து, நடராஜன் என்பவர்கள் இதற்காகத் தங்களது உயிரைத் தியாகம் செய்தனர். 1939களில் இந்தி மொழிக்கு எதிரான உணர்ச்சி தமிழகத்தில் பெருமளவில் எழுந்தது. இராமசாமி நாயக்கர், சோமசுந்தர பாரதியார் போன்றோர் இந்தி மொழிக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். 1939 முதல் 1946 வரை ஆலோசகரது ஆட்சியும் பின்னர் புதிய அமைச்சரவைகளும் என இந்திய ஆட்சி வரலாறு தொடர்ந்தது. 1947இல் இந்தியா விடுதலை பெற்றபோதிலும் 1950இல்தான் குடியரசு நாடாக உருவாக்கப்பட்டது. மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் மத்திய, மாநில அரசுகள் ஒன்றிக்கு மேற்பட்ட மொழிகளை ஆட்சிமொழியாகக் கொள்ள இந்திய அரசியல் சாசனம் வழிவகை செய்துள்ளது.

மாநில மக்கள் கேட்கின்ற வகையில் அதன் தன்மை குறித்தே அவர்களது மொழி பயன்படுத்தப்படும் அரசியல் சாசனம் 343ஆவது பிரிவு, தேவநாகரி வரிவடிவத்தில் உள்ள ஹிந்தி மொழியை அலுவல் மொழியாக அங்கீகரித்துள்ளது. அரசியல் சாசனம் செயன்மைக்கு வந்த பிறகு பதினைந்து ஆண்டுகளுக்கு ஆங்கிலம் அலுவல் மொழியாகவே இருக்கும் என்றும் கூறப்பட்டது; மேலும் உட்பிரிவு, 351இன் எட்டாவது அட்டவணை மொழி வளர்ச்சி பற்றிப் பேசுகிறது. ஹிந்தி மொழியின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டியது கடமையாக்கப்பட்டுள்ளது. ஹிந்துஸ்தான் போன்ற மொழிகளி லிருந்து சில சொற்களையும் சில கூறுகளையும் கிரகித்துக் கொண்டு ஹிந்தியை வளர்க்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**பாராளுமன்ற மொழி**

உட்பிரிவு 120இன்படி ஹிந்தியும் ஆங்கிலமும் பாராளுமன்ற மொழிகளாக அமைந்து அலுவல்களைச் செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ பேச முடியவில்லை யென்றாலும் சபாநாயகர் அனுமதி பெற்று, தமது தாய் மொழியில் அவையில் பேசலாம்.

**மாநில மொழிகள்**

உட்பிரிவு 345 மாநிலச் சட்டசபைக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. மாநிலங்கள் தமது சட்டமன்றங்களில் ஓரிரு மொழிகளைப் பயன்படுத்தலாம்; அல்லது ஹிந்தியைப் பயன்படுத்தலாம். எனினும் ஆங்கிலம் தொடர்ந்து சட்டமன்ற மொழியாக நீடிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சட்டமன்ற மொழி**

உட்பிரிவு 210இன்படி மாநில அலுவல் மொழியாக ஹிந்தியோ ஆங்கிலமோ இருக்கலாம். மாநிலச் சட்டமன்றங்களில் ஆங்கிலம் அல்லது ஹிந்தி தெரிந்திராதவர்கள் தமது தாய் மொழியிலேயே பேசலாம். எனினும் சட்டமன்ற நடவடிக்கைகளை ஆங்கிலத்தில் ஆளுநருக்கு அளிக்க வேண்டும்.

**மாநில உறவுகள்**

உட்பிரிவு 346இன்படி மாநிலங்களில் அலுவல் மொழியாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகளிலேயே பிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ள முடியும். அம்மொழியிலேயே மத்திய அரசோடு தொடர்பு கொள்ளலாம். ஹிந்தி மொழியை அலுவல் மொழியாகக் கொண்ட மாநிலங்கள் அம்மொழியிலேயே தொடர்புகளைத் தமக்குள் வைத்துக் கொள்ளலாம்.

### மொழிச் சிறுபான்மையினர்

உட்பிரிவு 301இன்படி கல்வி நிலையங்களைத் தமது விருப்பத்திற்கு உகந்தவாறு அமைத்துக் கொள்ள வழி செய்கிறது. உட்பிரிவு 347இன்படி பெரும்பான்மையினர் தேவை கருதி அவர்களது மொழியில் கல்வி மற்றும் நிர்வாகங்களை நடத்திட வழிவகை செய்யலாம் எனக் கூறுகிறது உட்பிரிவு 350, மக்களின் குறைகளைத் தெரிவிக்கவும் பிரதிநிதித்துவப்படுத்தவும் வழி செய்கிறது. மாநில மொழிகளின் பயன்பாடு குறித்து அதிகாரி களுக்குத் தெரிவிக்கலாம்.

### தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்

வரலாற்றுக் காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ், தமிழகத்திலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் ஆட்சி செய்து வந்தது என்பது பண்டைய இலக்கியங்கள் தெரிவிக்கின்ற செய்தியாகும். தற்போது இந்தியாவில் ஆங்கிலம் பிடித்துள்ள இடத்தை விட அஃது சற்று அதிகமாகும். சங்கம் மருவிய காலந்தொட்டு வடமொழி ஆதிக்கத்தாலும் பிற மொழியினர் ஆட்சியாலும் தமிழ் மொழி இந்தியாவின் தென்பகுதிக்குத் தள்ளப்பட்டு இன்று ஒரு மாநில மொழியாகச் சுருங்கியுள்ளது. தமிழகப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் கடந்த 2000 ஆண்டுகளில் அன்னிய மொழிகளே அதிகமாக ஆட்சி மொழிகளாக இருந்து வந்துள்ளன. சோழர் காலத்திலும் வடமொழிக்குச் செல்வாக்கு இருந்துள்ளது. பின்னர் தமிழகத்தை ஆண்ட தெலுங்கர், மராட்டியர், இஸ்லாமியர் காலத்தில் தெலுங்கு, உருது, மராட்டி, பாரசீகம் ஆகிய மொழிகள் செல்வாக்குப் பெற்றன. பின்னர் 1857 முதல் 1956 வரையிலான நூறாண்டுகளில் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று வளர்ந்தன. இந்திய தேசிய மொழிகள் அனைத்தும் சம மதிப்பு பெற இயலவில்லை. இந்திய மொழிகள் எவற்றிற்கும் தேசிய மொழிகள் என்ற தகுதி வழங்கப்படாமல், வட்டார மொழிகள் என்றே அவை அழைக்கப்பட்டன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தேசிய இன மொழிகளை மாநில ஆட்சிமொழிகள் ஆக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருப்பினும் அது விதிக்கும் வரையறைகள் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு ஏற்ற விதத்திலேயே உள்ளன.

### ஹிந்தி எதிர்ப்பு

1937இல் ஹிந்தி கட்டாயக் கல்வியாகத் திணிக்கப்பட்டபோது அதற்குத் தமிழகத்தில் கிளம்பிய எதிர்ப்பும் அதைத் தொடர்ந்து தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வர வேண்டும் என்ற ஆதங்கமும் 1956இல் தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் கொண்டு வந்ததன் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. தமிழ் நாட்டின் ஆட்சிமொழியாகத் தமிழ் ஆகலாம் என்ற சட்டம் இதன் வழி அறிவிக்கப்பட்டது. 1951இல் அயல்மொழி சொற்களைத் தமிழ்ப்படுத்தும் செயன்மை தமிழகத்தில் தொடங்கிவிட்டது. அரசுக் கடிதங்கள், கோப்புகள் யாவும் முடிந்த வரை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. அரசு ஆணைகளில் தேவையான கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டன. 1938இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், இ.மு.சுப்பிரமணியப் பிள்ளை தலைமையில் கலைச் சொற்கள் எனும் தொகுதியை வெளியிட்டது. உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழையே பயிற்சி மொழியாக அறிமுகப்படுத்தியது. 1955இல் ஆட்சித் துறைத் சொல்லாக்கக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அக்குழுவின் மூலமாக ஆட்சித் துறையின் சொற்கோவையும் உருவாக்கப்பட்டது. அன்றைய முதல்வர் கு.காமராசர் தலைமையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அளித்த சொற்கோவையை ஆய்ந்து ஆட்சிச் சொல் அகராதி ஒன்றை 1957இல் வெளியிட்டது. கி.இராமலிங்கனார், புலவர் கோ.மு.முத்துசாமி பிள்ளை ஆகியோரின் துணையுடன் மேலும் சில சொல்லாக்கங்களும் மொழிபெயர்ப்புகளும் உருவாக்கப் பட்டன. ஆட்சிச் சொல்லகராதியின் 2ஆம் பதிப்பு 1962இலும் 3ஆம் பதிப்பு 1971இலும் வெளிவந்தன. 4ஆம் பதிப்பு பல மாற்றங்களுடன் 1983ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1990இல் 4ஆம் பதிப்பின் மறுபதிப்பு வெளியாகியது.

அரசு அலுவலகங்களில் தமிழ்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற சட்டம் 1958இல் வந்தது. ஆட்சிமொழிக் கையேடு 1965இல் வெளிவந்தது. நீதிமன்றத்தில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற சட்டம் 1970இல் வந்தது. மேலும்

21.06.1978 முதல் அனைத்துப் பணியாளர்களும் தமிழில்தான் கையொப்பமிட வேண்டும் என்ற ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. 1968இல் நீதியரசர் ஆனந்த நாராயணன், ஒரு சட்டச் சொல் அகராதியை வெளியிட்டார். 1986இல் தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் ஆட்சிமொழி ஒரு வரலாற்று நோக்கு எனும் நூலை வெளியிட்டது. மேலும் 1994இல் சட்டத் தமிழ் அகராதி மறுபதிப்பையும் வெளியிட்டது.

இவ்வாறு தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்டு, பல்வேறு கட்டங்களாகச் செயன்மைப்படுத்தப்பட்டிருப்பதை அறியலாம்: எனினும் ஆங்கிலம் தொடர்ந்து அலுவல் நிமித்தமாக இருந்து வருவதைத் தவிர்க்க இயலவில்லை. நடுவண் அரசு மும்மொழிக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் தமிழக அரசு இருமொழிக் கொள்கையையே பயன்படுத்தி வருகிறது.

திராவிடக் கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று 1963 இல் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி நேரு (1959) அளித்த உறுதிமொழியின் பேரில் தமிழக அரசு இருமொழிக் கொள்கையை நிறைவேற்றி வருகிறது. அதாவது தமிழும் ஆங்கிலமும் தமிழத்தில் ஆட்சி மற்றும் கல்வி மொழிகளாக இருக்கும் என்பதாகும்.

***தலைவர், அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர் - 613 005.**